Registered No. M. 101[illegible]

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.

வீடுபெறநில்.

வெண்டாமரை க	1913-ம் ஆடீ [illegible] - மீ	இதழ் ரு.

பத்திராபர் :— சு. பங்காருப் பத்தர்

கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

புதுவை.

வருஷ சந்தா ரூ. 1	வெளிநாட்டிற்கு அ. 2
தபாற் கூலி அணா 4	தனி சஞ்சிகை அணா 2

புதுவை வித்தியாபிவர்த்தனி அச்சுக்கூடம்.

உள்ளுறை.

பக்கம்

சங்கங்கள்:— பத்திராதிபர். ... ...

பாலசிக்ஷை:— ஸ்ரீமதி த. பு. அம்மணியம்மாள் B. I.,
புதுவை. 4

நம்மிடம்:— ஸ்ரீமத் செங்கல்வாய முதலியார்,
காஞ்சிபுரம். ... ...

சரீரத்தின்பயன் :— ஸ்ரீமத் S. நடேசதேசிகர்,
கவர்ன்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர், திரவி. 8

மணிமேகலை:— பத்திராதிபர். 10

மயிலைச்சிலேடைவெண்பா: — ஸ்ரீமத் வித்வான்
பு. அ. பெரியசாமிப்பிள்ளை 1

தமிழாராய்ச்சி:— ஸ்ரீமத் தி. வெங்கடராமஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர், பென்ஷன்தார். 14

தொல்காப்பியம் பொருளதிகாரம்:— பத்திராதிபர். ... 16

மங்கலம்:— வேதாந்தபாஸ்கரர் கோயிலூர்
ஸ்ரீமத்வீர - சுப்பைய சுவாமிகள். 17

நியாயமாலா:— ஸ்ரீமத் அநந்தபத்மநாப சுவாமிகள்,
காஞ்சிபுரம். 18

சுஜனசம்வாதம்:— ஸ்ரீமத் ஆ. செங்கல்வராய
முதலியார், காஞ்சிபுரம் 18

மநீஷா பஞ்சகம்:— பத்திராதிபர். 20

சுவிவேக தர்ப்பணம்:— பத்திராதிபர். 21

சமாசாரம் முதலியன. 23

திருநீற்றுப் பெருமை.

இப் பெயர்கொண்ட புத்தகம் 3½ பாரத்தில் நல்ல கிளேஸ் காகிதத்தில் சுத்தப்பிரதியாக அச்சிடப் பெற்றுள்ளது.

பலநூல்களை யாராய்ந்து அறியவேண்டிய திருநீற்றைப் பற்றிய விஷயங்கள் முழுவதும் இவ்வொரு நூலிலேயே நன்கு விளங்கும்

ஒரே முறையில் 10 - புத்தகம் வாங்குபவர்கட்கு ஒன்று சேர்த்துக் கொடுக்கப்படும். விலை அணா 2.

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

S. நடேசதேசிகர், கவர்ன்மெண்ட் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்,
திரவி,
திருமலைராயன்பட்டணம் போஸ்டு.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபெறநில்.

வெண்டாமரை க.] 1913-ம் ௵ மே ௴ [இதழ் ரு.

இலௌகிகப் பகுதி.

சங்கங்கள்.

அறிவுடையார் பலர் ஒன்றுகூடிக் குலாவுதல் சங்கமெனப் படும். இச்சங்கத்தா லெய்தும்பயன் இவ்வளவென்று வரையறுத்த லியலாது.

உலகத்தில் ஒருவன் தன் வாழ்நாளை இனிமையாக்கிக் கொள்ள விரும்பின், கல்வி கற்று அறிவைப் பெறுதல்வேண்டும். கல்வியாற் பெறுதலினும் கேள்வியான் அறிவைப் பெறுதல் மிக வெளிது. எப்பொழுதும் கற்றலைவிடக் கேட்டலே நன்று என்பர் பெரியோர். ஏனெனின், சொல்பவர்கள் சொல்லும் பொருட்களை முன்னமே ஆராய்ந்து சீர்ப்படுத்தி வைத்திருப்பாராதலின். இப் பெரு நன்மை சங்கமொன்றினாலேயே கிடைக்கற்பாலது. யாங்ஙன மெனிற் கூறுதும்:

ஒருவன் தனியே யிருந்து எல்லா நூல்களையுங் கற்று அறிவைப் பெறுதலென்பது இயலாத காரியம். பல நூல்கள் கற்றுணர்ந்த பல்லோர் குழுமிய சங்கத்தின்கண், பலரும் தாந்தாங் கற்ற நூற்கட்பொதிந்த நுண்ணிய பொருள்களை எடுத்துக்காட்டி இனிது விளக்குவர். அதனால் பலநூல்கள் பயின்று பெறவேண்டிய

அறிவு ஒருவனுக்குச் சங்கத்தாற் கிடைக்கின்றது. ஆதலின் தக்க வாறு கல்வி கல்லாதவரும் சங்கமெய்துவரேல் சாற்றரும் பயன் பல சாலவெய்துவரென்பது திண்ணம்.

இனிக் கற்றவர்களோ தாங்கள் கற்ற நூற் பொருள்களைப் பிறர்க்கு எடுத்துக் கூறுவதனுல் ஐயமகன்று மேன்மேலும் போ றிவு கிடைக்கப் பெறுகின்றூர்கள். இன்னும் தாங்களறியாத மர்மங் களையும் அறிந்துகொள்ளுகின்றூர்கள். இங்ஙனம் கற்றவர் கல்லா தவர் என்னும் இருதாத்தார்க்கும் பன்முகத்தானும் நன்மை பயப் பது பங்கமகற்றும் சங்கமேயென்க. கற்றுத் தேர்ந்த புலவர்களை யும், குற்றந்தீர்ந்த பெரியோர்களையும் அகப்படுத்துதற்குச் சங் கமே தகுந்த வலையென்க.

இத்தகைய சங்கத்தில் எவ்வளவோ அரிய பெரிய பொருள் கள் வெளிப்படுத்தப்படும். அவையனைத்துங் கற்றுப் பயன் பெற லாம். கற்றூரை நோக்கிக் கருத்தழிந்து மேன்மேலுங் கற்க முயல லாம். அங்குப் பிரசங்கம் செய்யும் பல விடயங்களைக் குறித்துப் பல நூல்கள் விரைந்து பார்க்க வேட்கையுண்டாகும். இதனுல் சங் கத்திற் சேர்ந்த ஒருவன் ஒரு புலவனுய்விடுவனென்பது வெள் ளிடைமலைபோல் விளங்கத் தக்கது.

மேலும் சங்கத்தில் பல விடயங்களைப்பற்றி வாதம் செய் வதனுல் வாக்கு வல்லமை ஆக்கம் பெறுகின்றது. வாக்கு வல்லமை யின் சிறப்பை வழுத்தவும் வேண்டுமோ? "சொலல்வல்லன் சோர் வில னஞ்சா னவனை யிகல்வெல்லல் யார்க்கு மரிது" என்றபொய்யா மொழியே அதனை நன்கு விளக்கும்.

எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னு மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

(நீதிநெறிவிளக்கம்.)

நல்லாசிரியனை யறிந்து எவ்வளவாயினும் கல்வியை ஆராய்ந் தறிதல் இல்லையெனிற் பயனில்லையாம்; அங்ஙனம் ஆராய்ந் தறிந் தும் கேட்போர்க்குப் பொருள்விளங்கச் சொல்லும் சொல்லின் வல்லமை ஒருவற்கில்லையெனின், அக்கல்வி என்ன பயன்படும்?

அச்சொல்வன்மையுமுளதாயின் பொற்பூ மணமுடையதுபோலும் என்பர் பெரியோர். எனவே வாக்கு வல்லமை யில்லாதவன் கல்வி பயனற்றதென்பது இனிது பெறப்படும். ஆனதுபற்றியே "இண ரூழ்த்து நாறா மலரனையர் கற்ற துணர விரித்துரையா தார்" என் றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும். இத்துணைச் சிறந்தவாக்கு வல்லமையைத் தருவது யாது? சங்கமொன்றே தருந்திறத்தது.

எதிர் வகுப்பார்களை யெதிர்ப்பதனால் பிறரை யெதிர்க்கு முறையும், அப்போது கோபத்தை யடக்குங்குணமும், காரியங் களைச்சீர்தூக்கித்தீர்மானிக்குந்திறனும்முதலியன சங்கத்தாலெய்து கின்றன. இன்னும் சங்கத்தின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடப்பதனால்நம்மையே நாம் பாதுகாத்துக்கொள்ளும்தன்மையும், சபைத்தலைவர் காரியதரிசி தனாட்சகர் என்ற வேலைகள் பார்ப்ப தனால் நமக்கேற்பட்ட வேலைகளை நாமே முட்டின்றி முடிக்கும் பொறுப்பும்,பிறரையாளுந் திறனும், இவைபோல்வன பிறவும் நமக் குண்டாகின்றன. பல பெயர்கள் ஒன்றுசேர்ந்து அளவளாவுதலால் அன்பு,ஒற்றுமை, நல்லொழுக்கமுதலியவற்றை நாமடைகின்றோம். இவை நம் வாழ்நாளை எவ்வளவு செவ்வைப்படுத்துமென்பதை உய்த்துணர்க.

அன்றியும் கற்றறிந்த நல்லோர் பலர் ஒன்றுகூடிக் களிப்புறு வதைப்பார்க்கினும் சிறந்த இன்பம் உலகத்தில் வேறென்னையுளது? இல்லையென்பது பின்வரும் முதுமொழியை உற்று நோக்குவோர்க் குத் தெற்றெனத் தெரியும்.

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையா
ரிகலில ரெஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்
தும்ப ருறைவார் பதி.

(நாலடியார்.)

கற்ற கேட்ட நல்லோர் பலர் ஒன்றுகூடித் தம்முள் அள வளாவிக் களித்துக்கொண்டிருந்த ஒரு கூட்டத்தில், வானுலகத்தி னின்றும் வந்த ஒருவன் அவர்களை நோக்கி, "சுவர்க்கலோகத்தை யடைதற்குரிய நற்கருமங்களைச் செய்யுங்கள்; அங்கு அரம்பை அமிர்த முதலிய போகங்களை யனுபவிக்கலாம்" என்று சொல்ல,

அதற்கு அக்கூட்டத்துள் ஒருவர் கூறினதாகக் கொள்ளத்தகுந்தது இச்செய்யுள்.

"குற்றமற்ற பழமையான நூற்கேள்விகளைக் கேட்குந் தன்மையையும் ஆயுதம்போற் கூர்மையான புத்தியையும் உடையவர்கள் தமக்குள்ளே கூடி மாறுபடுதலில்லாதவர்களாகி மகிழ்வதைக் காட்டிலும் இன்பமுள்ளதாயின் விசாலமான வானத்தின் மேல் வாசஞ்செய்கின்ற தேவர்களுடைய இடமாகிய சுவர்க்கத்தைப் பார்ப்போம்" என்பது இச் செய்யுளின் பொருள். எனவே நன்றாய்க் கற்றறிந்தவர்களோடு கூடி நேசமாயிருந்து அனுபவிக்கும் மகிழ்ச்சியைக் காட்டிலும் சுவர்க்கத்திலுண்டாகிய அனுபவம் சிறந்ததன்றென்பது பெறப்படும்.

சங்கமானது தன்னை யடைந்தவர்க்கு அளப்பரும் பயனை விளைப்பதுமன்றிப் பொது சனங்கட்கும் பிரசங்கமுகத்தானும் பத்திரிகைவாயிலானும் நன்மை பயப்பது நாடறியாததோ? கண்ணுதற் பெருங் கடவுளே கழகமோடமர்ந்து தமிழாராய்ந்தனரெனின், சங்கத்தின் பெருமையைச் சாற்றுவதெங்ஙன்?

ஆதலின் அறிவைப் பெருக்கி அளவற்ற நன்மைகளை விளைவிக்கும் சங்கங்களில் ஒவ்வொருவரும் சேர்ந்து உழைத்தல்வேண்டும். அச்சங்கங்கள் தளர்வுறாது என்றும் நின்று நிலவுமாறு பொது சனங்கள் அவற்றை ஆதரித்தல்வேண்டும். கடவுள் கருணை புரிவாராக. சுபம்.

பத்திராதிபர்.

பால சிக்ஷை.

௩-வது அத்தியாயம்.

முதல்வயது.

இவ்வயதி லனுசரிக்கவேண்டிய சுகாதாரமுறைகளும், ஆயுர்வேத விதிகளும்.

(தொடர்ச்சி.)

அம்மை வைத்தல்.

அம்மை அல்லது வைசூரி ஒரு பயங்கரமான வியாதி. அநேகமாக உயிர்ச்சேதம் செய்வதுடன் தப்பிப் பிழைத்தவர்களை ஆயுள்வரையில் குரூரப்

படுத்திச் சில்சமயம் கண்ணில்லாத கபோதிகளாகவும் ஆக்கிவிடுகின்றது.

ஆயினும் இக்கொடிய நோயின் பயங்கரமான ஆபத்தினின்று மீளுதற்குச் சுலபமான வழியொன்றுண்டு. அது அம்மை வைத்துக்கொள்ளுதலே.

அம்மை வைத்துக்கொண்டு வைசூரிக்குத் தப்பிப் பிழைக்கக்கூடிய உன்னதமுறையை ஜென்னர் (Genner) என்னும் ஆங்கிலேய ஆயுர்வேத பண்டிதர் 1776 - ம் ஆண்டில் அற்புதமாகக் கண்டுபிடித்தார். பெர்க்லீ (Berkley) என்னும் நகரத்தைச்சார்ந்த ஆயர்பாடியில் வசித்த கோத்தொழின்மாக்களில் ஒருவரையேனும் அம்மைநோய் பீடிப்பதில்லை யென்பதை யறிந்து இத்தகைய சிலாக்கிய உரிமையின் காரணத்தை விசாரிக்கலானார்.

பசுக்களின் மடியில் சாதாரணமாக வசூரிக்கொப்புளங்கள் உண்டாகின்றனவென்பதும், பால்கறக்கும் இடையர்களின் கைகளில் அக்கொப்புளங்களினின்று வடியும் பால் தற்செயலாய்ப்படவே அதனால் அவர்கள் கைகளிலும் அம்மைக் கொப்புளங்கள் போன்றவை தோன்றி மறைகின்றனவென்பதும், ஒருமுறை அக்கொப்புளங்கள் வரப் பெற்றவர்களுக்கு வசூரி நோய் ஒருபோதும் வருகிறதில்லையென்பதும், ஜென்னர் பண்டிதரின் நுட்ப ஆராய்ச்சியினால் வெள்ளிடைமலைபோல் வெளியாயின.

தாம் இங்ஙனம் கண்கூடாகக் கண்டறிந்த அனுபவ வுறுதியைச் சனோபகாரார்த்தமாகப் பரவுதல் செய்யவேண்டிப் பசுக்களின் மடியில் அம்மைப் பாலைக்குத்திக் கொப்புளிக்கச்செய்து அக்கொப்புளங்களினின்று வடியும் சீயைக்கொண்டு மனிதருக்கு அம்மைவைத்து வசூரியின் பயங்கர ஆபத்தினின்று அனைவரும் தப்பிப் பிழைக்கும் வழியைக் கற்பித்தவர் ஜென்னரென்னும் ஆயுர்வேத மகாபண்டிதரே.

ஆதியில் அம்மைவைத்துக்கொள்ள இசையாத ஒரு கிராமத்தின் ஜனங்களில் பெரும்பான்மையோர் வசூரிநோய்க்கு இரையானதையும், அம்மைப்பாலினால் தங்களை முன்னதாகவே பாதுகாத்துக்கொண்ட பக்கத்துக்கிராமத்தவர்கள் அந்நோய்க்குத் தப்பிப்பிழைத்ததையும், ஒரே பட்டாளத்தில் அம்மை வைத்துக்கொள்ளாதவர்களில் ஆயிரத்திற்கு நூற்றுக்கணக்காகவும், வைத்துக்கொண்டவர்களில் ஆயிரத்தில் இரண்டொருவர் மாத்திரமும் வசூரிநோயினால் மடிந்ததையும் பலதேசங்களிலும் இராசாங்கத்தார் பிரத்தியட்சமாகக் கண்டறிந்து கணக்கெடுத்திருக்கின்றார்கள்.

ஆகவே வசூரிநோய்க்குத் தப்பிப்பிழைப்பதற்கு அம்மைவைத்துக் கொள்ளுதலே ஒப்பற்ற உபாயமென்னும் உண்மை இற்றைக்கு எத்தேயத்தாராலும் எத்தகைய சாத்திரிகளாலும் நிராட்சேபமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பிராஞ்சு இங்கிலாந்து ஜப்பான் முதலிய நாகரிகத்தின் முதிர்ச்சி பெற்ற தேயங்களில் குழந்தைகட்கு ஒரு வயதிற்குள் கட்டாயமாக அம்மை

வைக்கவேண்டுமென்கின்ற நிபந்தனைகள் வெகு காலமாக எற்பட்டிருக்கின்றன.

இராசாங்க தண்டனைகளுக்கு அஞ்சியன்று, குழந்தைகளின் ஆரோக்கிய நலத்தைக்கோரியே நமது இந்துத்தாயர்கள் அவைகட்கு அம்மைவைப்பதற்குச் சிறிதும் தாமதிக்கலாகாது.

குழந்தை எவ்வளவு சிறியதாயினும் அம்மைவைப்பதினால் அதற்கு யாதொரு தீங்கும் எற்படாது. பிறந்த இரண்டாவது மாதக்கடைசியில்அல்லது மூன்றாவது மாத ஆரம்பத்திலேயே அம்மைவைத்தல் உத்தமம். பசுங்குழவிக்கு அம்மைவைத்தால் அதன் தேகசுகத்திற்கும் வளர்ச்சிக்கும்கெடுதி வருமென்கிற நம்மவர்களிற் சிற்சிலர்க்குள்ள வீணெண்ணத்தை முற்றும் விட்டுவிடவேண்டும். அம்மை வைப்பதினால் எற்படும் சிரமம் பெரிதன்று.

அம்மைப்பால் வைத்தவிடத்தில் எறும்பு கடித்ததுபோல் சற்றுத் தடித்திருந்து சில மணிநேரத்தில் மாறிவிடும். மூன்று அல்லது நாலுநாட்கள் சென்றபிறகு அவ்விடத்தில் வீக்கிச்சிவந்து கொப்புளிக்க ஆரம்பிக்கும். ஐந்தாவது ஆறாவது நாட்களில் கொப்புளங்கள் திரண்டு நீர்கோத்து வட்டமாகியும் சுற்றியிருக்கும் தோல் சிவந்தும் காணப்படும். எட்டாவது நாளிலே அக்கொப்புளங்கள் முற்றும் பழுத்துச் சீத்ததும்பி நிற்கும். பத்தாவது நாளினின்று கொப்புளங்கள் வாடி வதங்கி ஆறத்தொடங்கும். இருபத்தைந்து அல்லது இருபத்தாறாவது நாளில் கொப்புளங்கள் முற்றும் காய்ந்து பக்கு உதிரும். சுவடுகள் மாத்திரம் ஆயுள்வரையில் தோன்றுமாறு நிற்கும். அம்மைவைத்த மூன்று நாலு தினங்களுக்குப்பிறகு இரண்டு மூன்று நாட்கள் வரையில் சுரம் காண்பதுண்டு. இச்சுரத்திற்கும் அம்மை வைத்த கொப்புளங்கட்கும் ஒருவித பரிகாரமும் வேண்டியதில்லை. அவை காலத்தோடு தாமாகவே சுகப்படும். விபரீத ஔடதப்பிரயோகத்தினால்மாத்திரம் கெடுதிவரினும் வரும்.

உயிருக்கே பாதுகாவலாக நிற்கும் இவ்வுபாயத்தைத் தாமதியாமல் பிரயோகிப்பது குழந்தைகளைப் பெற்றவர்கள் தங்கள் கடமைகளில் முதற் கடமையாகக் கொள்ளவேண்டும்.

(இன்னும்வரும்.)

க - பு - அம்மணியம்மாள்.

நம்மிடம்.

நம்மிடம் என்றால் நமக்குச் சொந்தமான இடம் எனப் பொருள் படுமன்றோ. அஃதியாது? நாம் நமதென நினைத்திருக்கும் இத் தேகமிருப்ப

தற்கும் உழைப்பதற்கும் இடமாயுள்ள வீடு, காணியிவைகளை நம்மிடமென்போமா! என்போமாயின் இத்தேகமே நம்மிடமல்லாதபோது இஃதி இருந்து உழைப்பதற்கிடமாய வீடும் காணியும் எங்ஙனம் நமதிடமாம். ஆ! இதென்ன விந்தை. இத்தேகமும் நமதன்றோ! எனின், நம்முடையதன்று. நம்முடையதாயின் அதன்கண் ணிருக்கும் வாத பித்த சிலேத்துமங்கட்குப் பிரகோப முண்டாகாவண்ணம் அவைகட்கு (வாதபித்த சிலேத்துமங்கட்கு) உரிய ஆகாராதிகளை நாம் குடிக்கூலியாகச் செலுத்திவரவேண்டியதின்றே.

ஓர் வீட்டின்கண் அதற்கு உடையவனோடு ஒதுக்குக் குடியிருப்பானொருவன், அவ்வுடையவன் சமாதானமாயுள்ளவரையு மிருந்து, அவன் வெகுண்டபோது அவ்வீட்டினை விட்டகன்றுபோதல்போல, வாத முதலியவற்றின் இல்லாய இத்தேகத்தின் ஒதுக்கிருந்துவரும் நாம் அவ்வாதமுதலியவற்றிற்குப் பிரகோபமுண்டாகாவண்ணம் ஆகாராதிகளைக் காலந்தோறும் செலுத்தாமை முதலிய எந்தக்காரணத்தினாலாவது அவ்வாதமுதலியவைகளால் வெகுளப்பட்டபோது இத்தேகத்தினை விட்டகலவேண்டியதிருப்பதால் இத்தேகம் வாதமுதலியவைகளுக்குச் சொந்தமேயன்றி நமக்குச் சொந்தமல்லவே.

ஆகலின் நாம் நமக்குச்சொந்தமாய் ஓர் இடத்தினைத்தேடிக்கொள்ள வேண்டியதவசியமன்றோ! நாம் சுகமடைதற்கு இன்றியமையாது பெற்றிருக்கவேண்டியவை இடம், பொருள், ஏவல் என்பன வென்பதுயாவருக்குந் தெரிந்ததே. அவற்றுள்ளும் இடம் முக்கியமானது. ஒருவனுக்குப் பொருளும் ஏவலும் வாய்த்தும் இடம் ஒன்று சொந்தமாயமையாதபோது அவனை இடம் ஒன்றமைத்துக்கொள்ளாமையால் உண்டான கவலை வருத்திக்கொண்டேயிருக்கும். இடம் இல்லாதபோது எப்படியோ அப்படியே பொருளும் ஏவலும் இல்லாதபோதும் அதனால் உண்டாங்கவலை வருத்தாதோவெனின், எந்த இடத்துக்கு நாம் என்றும் எவ்வகைக் குடிக்கூலியையும் செலுத்தவேண்டிய அவசியமில்லையோ எந்த இடத்தை நாம் அடைந்த பிறகு நாமதனைவிட்டு எக்காரணத்தாலும் எக்காலத்தும் நீங்கவேண்டியதில்லையோ நீங்கவும் முடியாதோ அத்தகைய நாகாபரணனாகிய பரசிவ சரணாரவிந்தமாகிய இடத்தை நாமடைந்து விடுவோமாயின் பொருளின்மையாலும் ஏவலின்மையாலும் உண்டாங்கவலை நம்மை வருத்தாது. எக்காரணத்தாலெனின்,

இடம், பொருள், ஏவல்கள் நம்மால் விரும்பப்படுவ தெதனாலென ஆராயுமிடத்து, அவை சுகசாதனமாயிருக்குந்தகைமையாலென விளங்குகின்றது. நமக்குச் சுகத்திலும், சுகசாதனங்களிலும் விருப்புண்டாத லியற்கை. ஆயினும் மேலே எடுத்துக்கூறப்பட்ட பரசிவ சரணாரவிந்தமாகிய இடமோ சுகவடிவமாம். சுகசாதனவடிவமன்று. அச்சுகமோ பொருளாலும் ஏவலாலும் வேறெச்சாதனங்களாலும் அடையக்கூடியதன்று. "அவனருளாலே யவன்

ருள்வணக்கி" என்ற சுருதிப்படி அப்பாசிவ கிருபையொன்றினலேயே பெறத்தகுரியதாம். ஆகையால் அப்பழையோனருளை எப்பாடு பட்டாயினுந் தேடி நமக்குரிய சிற்சுகவடிவ பாசிவ சாணாரவிந்தமாகிய நம்மிடத்தை அடைந்து சுகிப்போமாக. சுபம்.

ஆ - செங்கல்வராயமுதலியார்
காஞ்சீபுரம்.

சரீரத்தின் பயன்.

முழுமுதற் கடவுளாகிய முதல்வன் நமக்குக் கொடுத்தருளிய அருமையினு மருமையாகிய இம்மனித சரீரத்தின்கண்ணுள்ள ஒவ்வொரு உறுப்புகளும் அக்கடவுளை வழிபடுதற்பொருட்டே அமைந்துள்ளன.

தலை கடவுளை வணங்குதற்கும், கால்கள் முதல்வன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தை வலம் வருதற்கும், கண்கள் இறைவன் உயிர்கள் பொருட்டுக் கருணையினுற் கொண்ட திருவுருவங்களைத் தரிசித்தற்கும், கைகள் அவ்வுருவை அருச்சித்தற்கும், வாய் அவன் புகழை ஓதித் துதித்தற்கும், செவிகள் அவன் புகழைக் கேட்டற்கும் உதவுதல் வேண்டும். இன்னும் முதல்வன் கொண்ட திருவுருவிலணிதற்குப் பூமாலைகள் தொடுத்துக் கொடுப்பதற்கும், திருநந்தவனப் பணிசெய்தற்கும், ஆலயங்களில் அலகிடல் மெழுகிடல் திருவிளக்கேற்றுதல் தூபமிடுதல் முதலியவைகட்குமே நமது காசாணாதிகளை உதவிப் பயனெய்துவது ஆவசிகமும் அறிவுடைமையுமாகும்.

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதற்கேற்ப இப்பிறப்பிலேயே முதல்வனையுணர்ந்து உய்திபெறல்வேண்டும். அஞ்ஞானத்தைக் களைந்து ஞானத்தைப் பெறல்வேண்டும். ஞான சொருபியாகிய எம்முதல்வனைச் சதா பூசிக்கவேண்டும். இது,

மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காய
மானிடத் தைந்து மாடு மான்பணிக் காக வன்றோ
வானிடத் தவரு மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்ப
ரூனெடுத் துழலு மூமை ரொன்றையு முணரா ரந்தோ.

என்ற சிவஞான சித்தியாரானும் தெற்றெனவிளங்கும்.

மனம் வாக்குக் காயமென்னும் முக்காணங்களில் மனம் முதல்வன் திருவுருவைத் தியானம் செய்யவும், வாக்கு முதல்வன் மந்திரங்களைச் செபிக்கவும், காயம் முதல்வனையருச்சித்து வழிபடவும் உதவுதல்வேண்டும். இனியும் இந்த மனித சென்மமே கிடைக்குமென்பது நிச்சயமில்லையாத

லானும் இச்சரீரம் நீங்குங்காலம் இதுவென அறியப்படாமையானும் காலந் தாழ்க்காது அதி விரைவில் முந்திக்கொள்ளவேண்டும் என்ற துணிபு பற்றியே நமது சேக்கிழார் சுவாமிகள் "ஊனடைந்த வுடம்பின் பிறவியே தானடைந்த வுறுதியைச் சாருமால்" என அருளிச்செய்திருக்கின்றார்கள். இம் மனித ஜென்மமே பயனடைவதற்குரியது என்பதற்கு மேற்கூறிய திருவருட்பாவே போதிய சான்றாகும்.

வரம்பிலாப் பெரும் புண்ணியமீட்டி நாம் இம் மனிதயாக்கையைப் பெற்றுள்ளோம். இது பெற்றும் இதனுலெய்தும் பயனைப்பெறுது கை விடுவோமாயின் பிறந்தும் பிறவாதவர்களாவோம் என்பதிற் சிறிதும் ஐய மின்று. கரசரணுதிகளுடன் மனித யாக்கை நமக்குக் கிடைத்தது எத்தகை யதெனின், ஒருவன் சமுத்திரத்தைக் கையினுல் நீந்திக் கரையேறினதை நிகர்க்கும். இதுபற்றியே "அரிதரிது மானிட ராத லரிது" என்ற முது மொழியும் நமக்கறிவுறுத்துகின்றது.

நாம் ஒரு மாதாவின் கருவில் பத்துமாதங்கள் வாசஞ்செய்த பொழுதே முதல்வனைக் கரசரணுதிகளைக்கொண்டு வணங்க ஏற்பட்டுவிட் டோம்.

"முதல்வ! உன் திருவடிகளில் என்னைச் சேர்த்துக்கொள், இந்தப் பிறப்பும் இறப்பும் இனி அமையும், சம்சார சாகரம் மகா கொடிது, மீட்சி யற்றது, பெரியோரால் கான்ற சோறென அருவருத்தொதுக்கப்பட்டது, இறைவ! தமியேனைக்காத்தருள்க" என்றும், "இக்கருப்பத்தினின்றும் வெளிப்பட்டபின் அம்புலிசூடியையகத்திருத்தித் திருவடித்தொண்டுபுரி வேன்"என்றும்பிரதிஞ்ஞைசெய்துகொண்டோம்.ஆனுல்பிறந்தபின்னரோ அவற்றையெல்லாம் மறந்துவிட்டோம். இப்பொழுது கடவுளை வழிபடுவ தற்கு நேரமில்லையென்று நினைக்கிறோம். நேரமில்லையென்று என்னசெய் கின்றோம்? குடும்ப வேலையில் முந்துகின்றோம். நாளை நமன்வந்து நம் மைப் பற்றியிழுக்கும்போது, "சற்றுப் பொறுத்துக்கொள் இப்பொழுது எனக்கு நேரமில்லை, எனது குடும்ப காரியங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லமுடியுமா? ஒருபோதும் முடி யாதே. குடும்ப விஷயத்தில்மாத்திரம் காலத்தைச் செலவிடுவதால் வரும் பயன் யாதோ?

ஆதலின் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் மேற்கூறியவண் ணம் தமது கரசரணுதியவயவங்களைக் கடவுள் வழிபாட்டிற் கீடுபடுத்தி, இச் சரீரத்தினுலெய்தும்பெரும்பயனை அடைய முயல்வது அத்தியாவசிகமாம்.

"கண்ணுதலா லயநோக்குங் கண்களே கண்கள்
கறைக்கண்டன் கோயில்புகுங் கால்களே கால்கள்

பெண்ணொருபா கனைப்பணியுந் தலைகளே தலைகள்
பிஞ்ஞகனைப் பூசிக்குங் கைகளே கைகள்
பண்ணவன்றன் சீர்பாடு நன்னாவே நன்னா
பரன்சரிதை யேகேட்கப் படுஞ்செவியே செவிகள்
அண்ணல்பொலன் கழனினைக்கு நெஞ்சமே நெஞ்ச
மவனடிக்கீ ழடிமைபுகு மடிமையே யடிமை."

என்னும் ஆன்றோர் திருவாக்கு இங்குச் சிந்திக்கற்பாலது.

S. நடேசதேசிகர்
கவர்ன்மெண்ட்பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்
நிரவி.

இலக்கியப் பகுதி.

மணிமேகலை.

ஆதிரை பிச்சையிட்ட காதை.

[பதினாறாவது மணிமேகலைக்கு ஆதிரையென்னும் பத்தினிப்பெண்டிர் பாத்திரமீந்த பாட்டு.]

௬௰ - ௯௧. தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கே னென்றவ ளேங்கலு
மாதிரை கேளுன் னரும்பெறற் கணவனை
யூர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்வி யாண்டிரான்
சந்திர தத்த னெனுமோர் வாணிகன்
வங்கந் தன்னொடும் வந்தனன் றோன்று
நின்பெருந் துன்ப மொழிவாய் நீயென
வந்தரந் தோன்றி யசரீரி யறைதலு
மையரி யுண்க ணழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉ
மரும்பெறன் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பின ளாயினள்

109 103

இ - ள். "நெருப்புங் கொல்லாத தீவினையை யுடையவளாகிய யான் என்ன செய்வேன்" என்று ஆதிரையானவள் வருந்துதலும், ஆகாயத்தின் கண் அசரீரிதோன்றி, "ஆதிரை! கேட்பாயாக; உனது பெறுதற்கரிய கணவனைக் கடலிற்றவழ்கின்ற அலைகள் கொண்டு செலுத்தச் சென்று, உடையின்றித் திரிகின்ற சாரணராகிய நாகர்வாழும் மலைப்பக்கத்தையடைந்துளன், அவன் அவ்விடத்தே பல ஆண்டுகள் தங்கியிரான்; சந்திரதத்தனென்னுமோர் வர்த்தகனது கப்பலிலேறி வந்துசேருவான் நீ நினது பெருந்துன்பமொழிவாயாக" என்று கூறிற்றாக; அதுகேட்ட ஆதிரை, அழகிய அரிபரந்தமையுண்ட கண்கள் அழுகின்ற துன்பம்நீங்கி, பொய்கையிற் புகுந்து நீராடி வருவாள்போன்று மனக் கவலுதலொழிந்து, தனதுவீட்டிற் சென்று "என் கண்மணியையொத்த எனது கணவன் விரைவில் ஈங்கு வருக" என்றுவேண்டிப் புண்ணியம்செய்வதில் வழுவாதவளாகி, பொழிகின்ற மழையைத்தாவல்ல பெறுதற்கரிய மரபினையுடைய பத்தினிப்பெண்களும் விரும்பித் தொழுதற்குரிய ஆச்சரியத்தையுடையளாயின ளென்க.

௫௨ - ௬௫. ஆங்கவள் கணவனு மலைநீ ரடைகரை
யோங்குயர் பிறங்க லொருமர நீழன்
மஞ்சுடை மால்கட லுழந்தநோய் கூர்ந்து
துஞ்சுதுயில் கொள்ளவச் சூர்மலை வாழு
நக்க சாரணர் நயமிலர் தோன்றிப்
பக்கஞ் சேர்ந்து பரிபுலம் பினனிவன்
றனே தமியன் வந்தன னளிய
னூனுடை யிவ்வுடம் புணவென் றெழுப்பலு
மற்றவர் பாடை மயக்கறுமரபிற்
கற்றன னாதலிற் கடுந்தொழின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
யாங்கவ ருரைப்போ ரருந்திறல் கேளா
யீங்கெங் குருமக னிருந்தோ னவன்பாற்
போந்தரு ணீயென வவருடன் போகி

இ - ள். ஆதிரை கணவனாகிய சாதுவனும் அலைகின்ற நீரையடுத்த கரையில்மிகவுமுயர்ந்த மலையில் ஒருமரத்து நீழலில், அழகுடைய பெரியகடலில் அலைந்ததனாலுண்டாகிய வருத்தமிகுந்து மிகுந்த நித்திரை கொண்டனன்; கொள்ளுதலும், அச்சத்தைத்தருகின்ற அம்மலையில் வாழும் இனிமையில்லாதவர்களாகிய நக்கசாரணர் தோன்றிச் சாதுவன் பக்கல்வந்து, "இவன் மிகவும் வருந்தினான், தனித்தவனாகித் தானே வந்தனன் எளியன்; ஊனையுடைய இவ்வுடம்பு நமக்கு உணவாகும்" என்று எழுப்புதலும், சாதுவன் அந்நாகர்களுக்குரிய பாஷையை விளங்கக் கற்றவனாதலின் அவர்களோடு பேச, கொடுந்தொழிலையுடையவர்களாகிய அந்நாகர் அவனைச் சூழ்ந்து வரு

த்துதலை விட்டு வணக்கமாகப்பேசிக் கூறுவாராயினர்: "பெறுதற்கரிய திறலையுடையாய்! கேட்பாயாக; ஈங்கு எமது குரு இருக்கின்றார், அவரிடத்து நீ வருவாயாக" என்றுசொல்ல, அங்ஙனமே அவருடன் சென்றனன் சாதுவனென்க.

௬௬-௮௩ கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்கலும் விரவிய விருக்கையி
லெண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மைய னாகிக்
கோடுயர் மரநிழற் குளிர்ந்த பின்னவ
னீங்குநீ வந்த காரண மென்னென
வாங்கவற் கலைகட லுற்றதை யுரைத்தலு
மருந்துத வின்றி யலைகட லுழந்தோன்
வருந்தின னளியன் வம்மின் மாக்கா
ணம்பிக் கிளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்கள் ளூனும் வேண்டுவ கொடுமென
வவ்வுரை கேட்ட சாதுவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டே னென்றலும்
பெண்டிரு முண்டியு மின்றெனின் மாக்கட்
குண்டோ ஞாலத் துறுபய னுண்டெனிற்
காண்குவம் யாங்களுங் காட்டுவா யாகெனத்
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும்

(இ - ள்) கள்ளுப் பானையும் மிக்க புலால் நாற்றமும் வெள்ளிய எலும்புவற்றலும் கலந்துகிடக்கின்ற இடத்தில், கரடியானது தன் பெண்கரடியோடு இருந்ததுபோல, அவர்கள் தலைவன் தன் மனைவியோடிருந்த தன்மையைச் சாதுவன் கண்டு, பாஷையினாலே அவனைத் தன்வயமாக்கி, அவன் பகுதித்தன்மையுடையவனாய்க் கிளைகளோடுயர்ந்த மரத்து நிழலில் இளைப்பாறியபின்னர், அக்குருமகன் சாதுவனை நோக்கி, "இவ்விடத்து நீ வந்தது யாதுகருதி" என்றுகேட்க, கடலில் தனக்குநேரிட்டதைச்சாதுவன் அவனுக்குச்சொல்லினன்; சொல்லுதலும், அந்நாகர்தலைவன் "அலைகடலில் உழன்றவனாகி இவன் "உணவில்லாமல் வருந்தினான், அளிக்கத்தக்கான், நாகர்களே! வாருங்கள், இவனுக்கு விருப்பத்தைத்தருகின்ற கள்ளும் மாமிசமும் வேண்டியவளவு கொடுத்து இளையளாகிய ஒரு பெண்ணையும் கொடுங்கள்" என்று கூறினன். அச்சொற்களைக்கேட்ட சாதுவன் கவலையுற்று, "கொடியசொற்களைக்காதினாற்கேட்டேன், அவைவேண்டா" என்று கூறுதலும், தூண்டப்பட்ட கோபத்தையுடையவனாகிய அந்நாகர்தலைவன் "பெண்டிரும் உணவும் இல்லையெனின் மனிதர்களுக்கு உலகத்தில் அடை

யும்பயன் வேறுண்டோ? உண்டெனிற் காட்டுக, யாங்களும் அறிவேம், சொல்வாயாக" என்றுகேட்க, சாதுவன் சொல்லுவான்.

பத்திராதிபர்.

மயிலச் சிலேடை வெண்பா.

---

௪. தண்டா மரைச்சுனையுந் தன்மமனத் தோர்காமும்
வண்டான மேயு மயிலமே—பண்டான
சத்தியத்த னத்தன் றனையன் மருமகனீள்
சத்தியத்த னத்தன் றலம்.

(இ - ள்.) தண் - குளிர்மையாகிய, தாமரை - தாமரைமலர்கள் நிறைந்த, சுனையும் - குளத்தினிடத்திலும், வண்டானம் - நாரைகள், மேயும் - மீன் களையுண்ணுஞ் சிறப்பினையும், தன்மமனத்தோர், தரும சிந்தையுடையவர் களது, காமும் - கைகளும், வண் - வளப்பம்பொருந்திய, தானம்-ஈகைகள், எயும் - பொருந்துஞ் சிறப்பினையுமுடைய, மயிலமே-மயிலமலையே, பண்டு ஆன - பழைமையாகிய, சத்தி - உமாதேவியாரை, அத்தன் - பாதியாக வுடைய சிவபெருமானுக்கு, தனையன் - புத்திரரும், நத்தன்-சங்கேந்திய விஷ்ணுமூர்த்திக்கு, மருமகன் - மகள்கணவரும், நீள் - நீண்ட, சத்தி-வே லாயுதத்தை, அத்தன் - திருக்காத்திலேயுடையவரும், அத்தன் - உலகபிதா வானவருமாகிய முருகக்கடவுளுக்கு, தலம் - இருக்குமிடமாம், எ - று.

"எத்திறமீசனின்றனத்திறமவளுநிற்பள்"என்றசித்தியார்திருவிருத்தப் படி சத்தி அக்கினியிற் சூடுபோலச்சிவத்தைப்பிரியாது நிற்றலின், பண்டா னசத்தியென்றும்.

"ஈன்றாளுமாயெனக்கெந்தையுமா" என்ற ஆளுடைய அரசுகளின் திரு வாக்குப்படி, கடவுளே சீவர்கட்குத் தாயுந்தந்தையுமாதலின் அத்தன் என்றும்.

மூன்றாமடியில் சத்தியத்தனத்தன்றனையன்மருமகன் என்பது, சத்தி யத்தன்றனையன் எனவும், நத்தன்மருமகன் எனவும் பிரித்துக்கூட்டிப் பொருள்செய்யக்கிடந்தமையின், (நன்பொது) - "பெயரும் வினையுமாஞ் சொல்லையும்பொருளையும், வேறுநிரனிறீஇ முறையினுமெதிரினு, நேரும் பொருள்கோ ணிரனிறை நெறியே" என்னும் கூ௩ - ம் சூத்திரவிதிப்படி நிரனிறைப்பொருள்கோள்.

௫. தென்மகளிர் தந்தனத்துஞ் சீர்முனிவர் தம்மினத்து
மன்மதனஞ் செய்யு மயிலமே—பன்னஞ்
சமர புரியார் தனிமயிலார் போற்றுஞ்
சமர புரியார் தலம்.

(இ-ள்.) தென் - அழகிய, மகளிர்தம் - பெண்களினுடைய, தனத்தும் முலைகளிடத்திலும், மன்மதன் - காமன், அஞ்சு - பஞ்சபாணங்களையும், எய்யும் - விடுஞ்சிறப்பினையும், சீர் - சிறப்பினையுடைய முனிவர்தம் - தவசிகளுடைய, இனத்தும் - கூட்டத்திலும், மன் - பெருமையைத்தரும், மதனஞ்செய்யும் - மௌனஞ்சாதிக்குஞ் சிறப்பினையுமுடைய மயிலமே - மயிலமலையே, பல் - பற்களிலே நஞ்சம் - விஷத்தையுடைய, அர - பாம்புகளை, புரி - ஆசையோடும், ஆர் - உண்ணும், தனி - ஒப்பற்ற, மயிலார் - மயில்வாகனத்தையுடையவரும், போற்றும் - (அன்பர்கள்) துதிக்கும், சமரபுரியார் - திருப்போரூரையுடையவருமாகிய முருகக்கடவுளுக்கு, தலம் - இருக்கும் இடமாகும், எ - று.

இலக்கணப்போலியா யும்மைதொக்கிவந்த 'அஞ்சு' என்னுந் தொகைக்குறிப்புச்சொல், நன்-பெயரியல் "ஒன்றொழிபொதுச்சொல் விகாரந்தகுதி யாகுபெயரன் மொழிவினைக்குறிப்பே முதறொகைகுறிப்போடின்னபிறவுங், குறிப்பிற்றருமொழி யல்லனவெளிப்படை" என்னும் ௧௨.ம் சூத்திர விதிப்படி பஞ்சபாணங்களைக் குறிப்பாலுணர்த்திற்று. மங்கையர் கொங்கையில் மன்மதன்பஞ்சபாணங்களையும் எய்தான் என்பதற்குப் பிரமாணம், நளவெண்பா சயம்வரகாண்டம்.

"செந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னாகத்தும்
வந்துருவ வார்சிலையைக் கால்வளைத்து—வெந்தீயு
நஞ்சுந் தொடுத்தனைய நாம மலர்வாளி
அஞ்சுந் தொடுத்தா னவன்." என்னும் ௧௬௧-வது வெண்பாவிற்காண்க. அரா எனற்பாலது, (நன் - உயிர்) 'குறியதன்கீழாக்குறுகலும்' என்னும் ௨௨ம் சூத்திரவிதிப்படி, குறிற்கீழாகாரங்குறுகிஅர வென்றாயிற்று.

பு - அ - பெரியசாமிப்பிள்ளை.

தமிழாராய்ச்சி.

ஆத்திசூடி வெண்பாவில் பின்வரும் இரண்டு சூத்திரங்களுக்கு ஆதாரமாக இரண்டு கதைகள் சுட்டப்பட்டுள்ளன. அவைகள் எங்குளவோ புலப்படவில்லை.

௩. ஐயமிட்டுண்.

௧௪. கண்டனசொல்லேல்.

வெண்பா.

வன்பிரம ராக்கதன்பால் மங்கலியப் பிச்சையருள்
என்பவருக் கேகொடுத்தி டேறினன்—அன்பதனால்

வள்ளலெனும் புன்னை வனநாத வஞ்சமிலா
துள்ளதிலே யையமிட் டுண். (௧)

கள்ளற் குரைத்தான் கனசத் தியவிரதன்
உள்ளபடி வேதியர்சொல் லோர்வழியைத்—தெள்ளியசீர்
மானதா புன்னைவன வள்ளலே மேலென்று
தேதெனினுங் * கண்டனசொல் லேல். (௧௪)

இவ்விரண்டு கதைகளையும் கேட்டறிந்தோ அல்லது நேரிற்படித் துணர்ந்தோ, தெரிந்து கொண்டுள்ள தமிழ்க்கலா விநோதவான்கள் இக் கதைகளைச் சுருக்கிக் கலைமகள் வாயிலாக வெளிப்படுத்துவார்களென்று இதை எழுதலானேன்.

குறிப்பு:— 108 சூத்திரரூபமான ஆத்திசூடி வாக்கியங்களுள் *இது 14 - வது சூத்திரம். இதனை ஆத்திசூடி வெண்பாவாகப்பாடியுதவிய இராம பாரதியார் "கண்டன சொல்லேல்" என்பதை மூலபாடமாகக்கொண்டு ஒரு கதையையும் மேற்கோளாகக் காட்டியுள்ளார். அதாவது சத்தியவிரத னென்பவன் தனக்கு ஒரு வேதியர் கூறியதொன்றை உள்ளபடி ஒருகள் ளற்கு உரைத்தானென்பது. ஒருண்மையை இடமறியாது கள்ளரிட முரைத்தமையாற்றீங்கு நேர்ந்துளதென்பது புலப்படுகின்றது. இக்கதை புலப்படாமையா லிது வெளிப்போந்தது. யாழ்ப்பாணம் சுன்னாகம் அ - குமாரசாமிப்புலவர் எழுதிய ஆத்திசூடி வெண்பாக் கதைச்சுருக்கத்தில் இக்கதை சேரவில்லை. 1840 - ம் ௵ சென்னையில் இராமாநுஜக்கவிராயர் செய்த காண்டிகையுரையிலும் பிறகு 1898 - ம் ௵ மதுரையில் பண்டிதர் சாமிநாதையர் செய்த விருத்தியுரையிலும் ஸ்ரீ ஆறுமுகநாவலர் இரண்டாம் பாலபாடத்தும் மூலபாடம் "கண்டோன்று சொல்லேல்" என்றே கொள் ளப்பட்டிருக்கின்றது. இராமபாரதியார் காலம் முந்தியதாதலால் அவர்மூல பாடமே சிறந்ததாகின்றது. அதனால் இடமறியாது கண்டதைக் கூறக் கூடாதென்பது புலப்படுவதால் தக்கவிடத்து உண்மை கூறலாமென்பது எதிர்த்தட்டாய்ப் புலப்படுகின்றது. உண்மை கூறவேண்டுமிடத்துக் கண் டதைமாற்றிக் கூறப்படாதென்பதும் புலப்படுகின்றது. மூலபாடம் கால கதியில் மாறிவிடுகின்றதென்பது புலப்படுவதற்கும் ஆத்திசூடியில் சிற்சில இடங்களில் மூலபாடம் பேதப்படுகின்றதென்பதைக் காட்டுவதற்குமே இது கலைமகளிவிடம்பெற்றதெனக் கொள்க.

இங்ஙனம்

தி. வெங்கடராம ஐயங்கார்

தமிழ்ப்பண்டிதர்

பென்ஷன்தார்.

இலக்கணப் பகுதி.

தொல்காப்பியம்.

நச்சினார்க் கினியம்.

பொருளதிகாரம்.

முதலாவது

அகத்திணையியல்.

உ. அவற்றுள், நடுவ ணைந்திணை நடுவணதொழியப்
படுதிரை வையம் பாத்திய பண்பே.

இது முற்கூறிய எழுனுள் தமக்கென நிலம் பெறுவனவும் பெறாதனவும் கூறுகின்றது. (இ - ள்) அவற்றுள் - முற்கூறிய எழுதிணையுள், நடுவண் ஐந்திணை-கைக்கிளை பெருந்திணைக்கு நடுவுநின்ற ஐந்தொழுக்கத்தினை, படுதிரைவையம் பாத்தியபண்பே - ஒலிக்குந் திரைசூழ்ந்த உலகிற்கு ஆசிரியன் பகுத்துக்கொடுத்த இலக்கணத்தை, நடுவணது ஒழிய - நடுவணதாகிய பாலையை அவ்வுலகம் பெறாதே நிற்கும்படியாகச் செய்தார். எ-று. எனவே, யானும் அவ்வாறே நூல்செய்வலென்றார்.

உலகத்தைப் படைக்கின்ற காலத்துக் காடும் மலையும் நாடும் கடற் கரையுமாகப் படைத்து, இந்நால்வகை நிலத்திற்கு ஆசிரியன் தான்படைத்த ஐவகை ஒழுக்கத்திற் பாலை யொழிந்தனவற்றைப் பகுத்துக்கொடுத்தான். அப்பாலை ஏனையபோல ஒரு பாற்படாது நால்வகை நிலத்திற்கும் உரியவாகப் புலனெறி வழக்கம்செய்து வருதல்பற்றிப் பாலைக்கு நடுவணதென்னும் பெயர் ஆட்சியுங் குணனுங்காரணமாகப்பெற்றபெயர். "நடுவுநிலைத்திணையே நண்பகல்வேனில்" என ஆள்ப. புணர்தல் இருத்தல் இரங்கல் ஊடல் என்பவற்றிற்கு இடையே பிரிவு நிகழ்தலானும்; நால்வகையுலகத்திற்கிடையிடையே "முல்லையுங்குறிஞ்சியு முறைமையிற்றிரிந்து - நல்லியல்பழிந்து நடுங்குதுயருறுத்துப் - பாலையென்பதோர் படிவங்கொள்ளும்" என முதற் பொருள்பற்றிப் பாலை நிகழ்தலானும், நடுவணதாகிய நண்பகற்காலம் தனக்குக் காலமாகலானும், புணர்தற்கும் இருத்தற்கும் இடையே பிரிவுவைத்தலானும், உலகியற்பொருளான அறம்பொருளின்பங்களுள் நடுவணதாய பொருட்குத்தான் காரணமாகலானும் நடுவணதெனக் குணம் காரணமாயிற்று.

பாயிரத்துள் எல்லைகூறியதன்றி ஈண்டும் எல்லைகூறினார், புறநாட்டிருந்து தமிழ்ச்செய்யுள் செய்வார்க்கும் இதுவே இலக்கணமாமென்றற்கு.

இவ் விலக்கணம் மக்கள்நுதலிய அகனைந்திணைக்கேயாதலின் இன்பமே நிகழும் தேவர்க்காகா. "காமப்பகுதி கடவுளும் வரையார்" என்பது புறம். நடுவணொற்றிணையென்னாது ஐந்திணையென்றார், பாலையும் அவற்றோடொப்பச் சேறற்கு. இத்திணையை மூன்றாகமேற் பகுப்பர்.

சாத்திரப்பகுதி.

மங்கலம்.

(தொடர்ச்சி.)

இன்னணம், விடயங்கள் சாரமற்றதென்றும் இடர்தொகுப்பதென்றும் காண்பித்தது மாத்திரம் சாலுமோ, மற்றவற்றைத் தேடற்குமூலமாம் அர்த்தத்திலுறு மனர்த்தத்தையுங் காண்பிப்பாம்: பவப்பவ்வத்தே வாளா வாழுந்தன மங்கையானவள் மிகுமிகு சுகமீவதாய் அவிவேகிகளாலுயர்வாய்க் கற்பிக்கப்பட்டுளாளெனினும், உண்மையினோருங்காற் கொலையொடு குடும்பபந்தங்கொடு நரகே முதலாயகொடுந்துயர் கொடுக்கின்றமையின் மாமய வினை துவேயாவளென்பதற் கையமுமுண்டு கொல்! இறையளவின்பேனு மின்பியையுணர்வேனுமீவதின்றுமென்பதிதனுட்கொள்ளக்கிடந்ததன்றே.

மழைப்போது நதியான தன்னகத்தே நடமிடு மெண்ணவொண்ணாக் கல்லோலங்களைத் தன்பாலுதிப்பிப்ப தொப்பத் தனங்களையும் சொற் சார்புற்ற வுற்சாகங்கள் மிகுந்தளவிடப்படா மனோரத மாலைகளையுடைய வரும் மிகுந்த சிந்தாகுலத்தே நொந்தவரும் ஆய ஆநந்த மூட சிரோமணிகளைத் தன்வயமா யிழுத்தலைப்பளன்றே. ஆற்றின்கண்ணூற்றுக்கணக் காந் தரங்கங்களெழுதலேய்ப்ப அர்த்தாங்கனையின்பானின்றும் துட்டசீலங் களால் வளர்ந்து அதிசாஞ்சல்யத்தோடுற்ற சிந்தைவடிவ வநந்த நந்தா மடந்தையர் முந்துறவர்.

அழன்மிதித்தோ ரிடத்தேயும் அரும்பதம் பதிக்குமாற்றலற்றீண்டு மாண்டுமோடி நடமிடுந் தாழ்ந்த பேதைமானத் தனங்களையும்ஓரிடத்தேயும் நிலைபேறடையா துலைந்து நூற்புகனெறிதமை யேற்பதிலாது நூறியுள்ளார் மாட்டுற்றுற் றீண்டு மாண்டுமோடி நடமிடுவள். தீச்சுடரைச் சிறிது தீண்டினும் தீண்டினானுக் காற்றொணா வெந்தாபமீந்து தானுமழிவதே போற்றனங்களையும் மற்றொருருவாலற்பந்தீண்டுறப்பெறினும் செலவிடப் படினும் தன்னைப் படைத்தானுக் களவறு மருந்தாபமீந் தந்தோ தானு மாய்வள்.

பொருண்மங்கையானவள் துன்பத்தாற் சம்பாதிக்கப்பட்டாளென்றாலும் இன்புற்றோராய குணவான்களதனுபவ விஷயமாத்திரமாவதின்றும், மற்றோ மன்னனது மாசுறுமியல்பேபோன் மூடப்பெற்றியளாய்க்குண குண ஓர்வின்றிச் சுயமே சமீபித்துள்ளானை மேவுகின்றனள். மடமையுற்ற மன்னர் தன்மவான்களாயும் குணவான்களாயு மிராநின்றவரோடு நேயம் செய்வதின்று யருகுற்ற எவனாயினு மொருவனோடு நேசிப்பது யாவரு மறிந்ததேயாமன்றோ.

(இன்னும் வரும்.)

வீர - சு.

நியாயமாலா.

11. சூசிகடாஹ நியாயம்:— சூசி - ஊசி, கடாஹம் - கொப்பரை, நியாயம் - திருஷ்டாந்தம். இது இரண்டுகாரியத்தில் பிரவர்த்திக்க நேரும்போது அவற்றில் குறுகிய காரியத்தை முன்னர்ச்செய்து விரிந்தகாரியத்தில் பின் பிரவர்த்தித்தலிதுபோல வென்கின்றது. அதாவது: ஒரு கொல்லனிடம் ஊசியும் கொப்பரையும்செய்யக்கொடுத்தபோது அவன் ஊசியை முன்னர்ச்செய்து பின் கொப்பரையைச் செய்ய வாரம்பிப்பதுபோல வென்பதாம்.

12. பிராம்மண வசிஷ்ட நியாயம்:— பிராம்மணர் - பார்ப்பார், வசிஷ்டர் - ஓர் பிரம்ஹரிஷி, நியாயம் - திருஷ்டாந்தம். இது குறித்துக் கூறப்படும் சமூகத்திலுள்ளதாகிய சஜாதியவஸ்து ஒன்றனைச் சிறப்பித்துக் கூறவேண்டிச் சமூகத்தினின்றும் அதனை வேறாய்க் கூறலிதுபோல வென்கின்றது. அதாவது: பிராம்ஹணரும் வந்தார் வசிஷ்டரும் வந்தார் என்புழிப் பிராமணரினும் வசிஷ்டர் விஜாதியுடையாரெனக் கருதப்படாமல் பிராமணரிற் சிறந்த வசிஷ்டரெனக் கருதப்படுமாறுபோல வென்பதாம். (எல்லாரும்வந்தார் மன்னனும் வந்தான் என்பது மிது.)

13. கபோதக நியாயம்:— கபோதம் - புறா, நியாயம் - திருஷ்டாந்தம். இது ஒரு கூட்டத்தினிகழும் யாதாமொருகாரியம் அக்கூட்டத்தி லுள்ளார் யாவர்மட்டும் ஒருங்கே நிகழ்வதிதுபோல வென்கின்றது. அதாவது: புறாக்களின் கூட்டத்தினிகழும் போக்குவரத்தாகிய காரியம் அக்கூட்டத்திலுள்ள புறாக்களியாவற்றினிடத்தும் ஒருங்கே நிகழ்தல்போல வென்பதாம்.

14. காகாக்ஷி நியாயம்:— காகாக்ஷி - காக்கைக்கண், நியாயம் - திருஷ்டாந்தம். இது இருவேறிடத்து ஒருபொருளே நின்றுபயனுறுத்தலிதுபோல வென்கின்றது. அதாவது: காக்கையின் இருகண்ணினும் ஒரு மணியே இருந்து பயனுறுத்தல்போல வென்பதாம்.

(இன்னும் வரும்.)

அநந்தபத்மநாபஸ்வாமி
காஞ்சிபுரம்.

சுஜன சம்வாதம்.

ஒரு நல்ல கப்பல்.

(முன் தொடர்ச்சி.)

சாந்தன். ஐயனே இதுகாறும் தாங்கள் கூறியவாற்றால் இத்தேகமே ஜனன மரணங்களை யடைகின்றதென்றும் ஆன்மா இத்தேகம் பிராப்த

மாதற்கு முன்னும் மரணத்திற்குப் பின்னும் உள்ளதென்றும், ஆகையால் ஆன்மா நித்தியமென்றும், உண்டாயழியும் இத்தேகம் நாமல்லவென்றும், நாம் இத்தேகத்தில் வசிக்கும் தேகியென்றும் உணர்கின்றேன். ஆனால் தங்களால் “ஆன்மா இத் தேகத்தினும் வேறு, நித்தியம்.” என்பதாகக்காட்டப்பட்ட இதுதங்கள் ஸ்வகபோலகற்பனையா? சுருதிசம்மதமா? என்பதையான் உணரவில்லை. ஆதலின் அதனையறிய இச்சிக்கின்றேன்.

கோற்றன். அன்ப, சொல்லப்பட்ட என்வார்த்தை சுருதி சம்மதமேயாம். சுருதிக்குமாறாகிய நம் யுக்தியனுபவங்கள் கொள்ளத்தக்கதன்று.

சாந்தன். ஐய, நமது யுக்திக்கும் அநுபவத்திற்கும் சுருதி மாறுகூறுமாயின், சுருதிதான் கொள்ளத்தக்கதன்றென என்சொல்லக்கூடாது?

கோற்றன். அன்ப, சுருதி ஈசுவரவாக்கியமாகையால் அது ஒருநாளும் அக்கிராஹ்யமாகாது. எதனாலெனின், ஈசுவரன் பேரறிவினையுடையார் ஆகலின் அவர் சர்வஜ்ஞர்; அவருக்கு மயக்கம் ஒருநாளும் உண்டாதவில்லை. இக்காரணத்தால் ஈசுவர வாக்கியமாகிய சுருதி கிராஹ்யமேயாம். நாம் சிற்றறிவினையுடையோம். ஆகையால் “கயிற்றிலரவம்” போல் ஒன்றில் மற்றொன்றையுணரும் மயக்க உணர்வை நாம் அடைதல்கூடும். ஆகலின் நம்யுக்தியும், அனுபவமும் பிறழ்ச்சியுறும். பிறழ்ச்சியுறற்குரிய நம்யுக்திக்கும் அநுபவத்துக்கும் சுருதி மாறாயிருக்குமாயின் நம்யுக்தியநுபவங்கள் ஆபாசமென மதிக்கப்படுமேயன்றி, சர்வஜ்ஞ ஈசுவர வாக்கியமாகிய சுருதி ஆபாசமென மதிக்கப்படமாட்டாது. இதனாற்றான் நம்மனோரை நோக்கச் சர்வஜ்ஞராயினும், பரமேசுவரனை நோக்கக் கிஞ்சித்ஜ்ஞர்களாகிய கௌதம கணாதாதி மகரிஷிகளால் கூறப்பட்டதாயினும் நியாய வைசேஷிகாதி மதங்கள் சுருதி விருத்தாம்சங்களில் சிஷ்ட ஜனங்களால் அக்கிராஹ்யமாயிருக்கின்றன.

சாந்தன். ஐயனே தங்களால் சொல்லப்பட்ட சிஷ்ட லக்ஷணம் யாது? அதனை யறிந்துகொள்வதால் நான் சிஷ்டர்கள் இவர்தாமென அறிதற் கிடனாம்.

கோற்றன். அன்ப, கேட்பாயாக. இருக்காதி சர்வவேதங்களும் பிரமாணமாம் எனச்சர்வவேதங்களின் பிரமாணத்தன்மையின் அங்கீகாரம் யாதோ அதனைச் சிஷ்டத்துவமென்பர். அதனையுடையார் சிஷ்டரெனப்படுவர்.

சாந்தன். ஐயனே, இந்தச் சிஷ்டத்வலக்ஷணத்தில் “இருக்காதி சர்வவேதங்களும் பிரமாணமாம் எனச் சர்வவேதங்களின் பிரமாணத்தன்மையின் அங்கீகாரம் யாதோ” என்பதான இவ்வளவுநீண்ட வாக்கியத்தைப் புணர்த்திக்கூறல்வேண்டுமோ? “வேதத்தைப்பிரமாணமாகக்கொள்ளுந்தன்மையாதோ” என இவ்வளவு இலாகவமாகக் கூறினால் போதியதன்றோ?

118

நோற்றன். அன்ப, இலாகவ சிலாக்கியத்தால் அவசியமான பயனுடைய வாக்கியங்களைக் கைவிடுவோமாயின் சொல்லப்படும் லக்ஷணம் துஷ்டமாய் விடுமே.

சாந்தன். ஐயனே, இலக்ஷணத்தில் சொல்லப்பட்ட "துஷ்டம்" என்பது யாது? அதனையறிய வேட்கையுண்டாயிருக்கின்றது. இன்னும் அதனோடு, இங்ஙனம் எனக்கு இடையிடையேயுண்டாகும் ஆசங்கைகளால் தங்களால் சொல்லப்பட்டு வரும் விஷயமானது விச்சேதமாதலைப்பற்றித் தங்கட்கு ஆயாசமுண்டாகுமோ வென்பதான அச்சமுமுண்டாயிருக்கின்றது. ஆயினும், என்போன்றாரது ஆசங்கைகளைப் போக்குவதில் ஊக்கமும் வல்லமையுமுடைய தங்கள் முகாரவிந்தத்தின் பிரசன்ன த்வவலியால் ஆசங்கைகளை நீக்கிக்கொள்ளவேண்டு மென்னும் அவாவானது உண்டான அச்சத்தை வெற்றிகொண்டது.

(இன்னும் வரும்)

செங்கல்வராயமுதலியார்
காஞ்சிபுரம்.

மநீஷா பஞ்சகம்.

௫-வது சுலோகம்.

யாதிர்யங் நரதேவதாபிரஹமித்யந்த ஸ்புடாக்ருஹ்யதே
யத்பாஸா ஹ்ருதயாக்ஷ தேஹவிஷயா பாந்திஸ்வதோசேதநா:
தாம்பாஸ்யை: பிஹிதார்க்க மண்டலநிபாம்ஸ்பூர்த்திம் ஸதாபாவயந்
யோகீநிர்வ்ருதமாநஸோஹி குருரித்யேஷா மநீஷாமம

இ-ள். பசு பக்ஷி மிருகமுதலியவற்றாலும் மனிதர் தேவர் முதலியவர்களாலும் 'நான்' என்று தமது மனத்தினுள்ளே எது நன்றாகத் தெரிந்துகொள்ளப்படுகின்றதோ, அகக்கரணம் புறக்கரணங்களோடு கூடின தேகவியாபாரங்கள் சுயமாகவே சைதன்னியமுள்ளவைகள்போல எந்தப் பிரகாசத்தின் சகாயத்தினாலே வியவகரித்துக்கொண்டுள்ளனவோ, அந்த பிரம சைதன்னியத்தை, பிரகாசமற்ற மேகத்தினால் மூடப்பட்ட சூரியமண்டலத்தோடு சமானமாக எப்போதும் பாவிக்கும்படியான ஞானியே சந்தோஷயுக்தமான மனதையுடையவன், ஆதலின் அவனே குரு; இது எனது அபிப்பிராயம்.

எல்லாப் பிராணிகளுடைய மனத்தின்கண்ணும் நான் என்று பாவிக்கப்படுவதும் இந்திரிய வியாபாரமுதலியவைகட்குச் சைதன்யரூபமாக விருந்து நடைபெறச் செய்வதுமாகிய ஆத்மாவை எவன் சுயம்பிரகாசமான ஜோதி சொரூபமாகப் பாவித்து அதனாலுண்டாகும் பிரமானந்த சுகத்தையடைந்துள்ளானோ அவனைச்சங்காசாரியர் தமது குருவென்று பாவிக்கின்றார்.

ரு - வது சுலோகம்.

யச்சௌக்யாம்புதி லேசலேசதஇமே சக்ராதயோநிர்வ்ருதா:
யச்சித்தே நிதராம்ப்ரசாந்தகலநே லப்த்வா முநிர்நிர்வ்ருத:
யஸ்மிந்நித்ய ஸுகாம்புதௌ களிததீர்ப்ரஹ்மைவ நப்ரஹ்மவித்
யக்கச்சித்ச ஸுரேந்த்ர வந்திதபதோ நூநம் மநீஷாமம.

இ - ள். அந்த இந்திரன்முதலிய தேவர்கள் பரப்பிரமத்தின் அபரிச்சின்னமான ஆநந்த சாகரத்துள் அணுமாத்திரமான சுகத்தினால் திருப்தியடைந்தவர்களாயிருக்கிறார்கள். பிரமத்தை எப்போதும் மனனம் செய்பவன் சங்கற்பமற்ற மனதினிடத்துப் பிரமசுகத்தையடைந்து திருப்தனாகின்றான். நித்திய சுகமென்னும் சமுத்திரத்தில் மூழ்கிய மனதையுடையவன்பிரமமேயாகின்றான், பிரமத்தையறிகிறவனல்லன்; இப்படிப்பட்டவன் எவனாயிருப்பினும் அவன் தேவர்களால் வணங்கத்தகுந்தவன். இது எனது நிச்சயமான அபிப்பிராயம்.

இந்திராதி தேவர்கள் பிரம்ம சுகலேசத்தை ஆசிரயித்துத்திருப்தராகின்றார்கள். சங்கற்பமில்லாத மனதினிடத்துப் பிரம்ம சுகத்தையடைந்த மனனசீலன் நித்திய சுகசமுத்திரத்தில் மூழ்கின மனமுடையவனாய்த் தேவர்களால் வணங்கத்தக்கவனாகின்றான் என்று சங்கராசாரியர் சாற்றினரென்க.

முற்றிற்று.

பத்திராதிபர்.

சுவிவேக தர்ப்பணம்.

(ஸ்ரீ சாந்தாநந்த சரசுவதிசுவாமிகள்
ஆந்திரபாடையில் அருளியது.)

உலகத்தின்கண்ணுள்ள பிராணிசமூகங்களெல்லாவற்றுள்ளும் மனிதப்பிறப்பே உத்தமமானது. அது சன்மாந்தர சுகிர்த பரிபாகவிசேடத்தான் உண்டாகக்கூடியதேயன்றி மற்றொன்றாலும் உண்டாகற்பாலதன்று. அப்படிப்பட்ட துர்லபமான சன்மம் கிடைத்தும் எதார்த்தஞானம் பிடிபடாமற்போமாயின், அது வியர்த்தமாய்ப்போகும். ஆதலின் புத்திமான்களான மனிதர்கள் காலையிலெழுந்தவுடன் இச்சரீரம் அநித்தியமென்றும், தூல தேகாவத்தையாகிய சாக்கிரத்திலிருந்தபொழுது தாம் கண்ட தேவர் அரசர் முதலானவர்களும், தாம்கேட்ட தேவேந்திராதி விருத்தாந்தங்களும், ஆலோசிக்குமிடத்து, எல்லா விடயங்களும் சூக்கும தேகாவத்தையான சொப்பனத்தில் தமக்கே தோற்றினாற்போல, தம்மாற்செய்யப்பட்ட புண்ணிய பாவ மிசிர கர்மபலங்கள் மறுபிறப்பில் தாமனுபவித்தற்பொருட்டு, ஊசியின்

பின்னே நூல்வருமாறு, தம்பின்னே தப்பாமல் வருமென்றும் யோசித்து எதார்த்த ஞானத்தைக் கைப்பற்றல்வேண்டும்.

தேகேந்திரியாதி பிரபஞ்ச மனைத்திற்கும் விலட்சணமாயுள்ள ஆன்ம சொரூபத்தைத் தெரிந்துகொள்ளுதலே எதார்த்த ஞானமெனப்படும். இத்தகைய எதார்த்த ஞானத்தைப் போதித்தற்பொருட்டே சுருதி மிருதிபுராண இதிகாசங்கள் ஏற்பட்டுள்ளன. அந்தச் சுருதி மிருதி புராண இதிகாசங்களில் கர்மம் பக்தி ஞானம் என்னும் மார்க்கங்கள் மூன்றும்கிரமமாகப் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றும் மனப்பரிபாகத்துக்குத்தக்கபடி மனிதர்களுக்கு அநுசரிக்கத் தக்கதாயிருக்கும்.

பூரணமாக அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கின்றவர்களுக்கு, தேகமே தானென்றும் காணப்படுகின்ற பிரபஞ்சமனைத்தும் நித்தியமென்றும் தோற்றுவது சகசம். ஆதலின் அப்படிப்பட்டவர்கள் ஆவசிகமாகச் சித்தசுத்தியின் பொருட்டு, சற்கருமாசரணத்தில் இச்சையுண்டாகிப் பிரவர்த்திக்கவேண்டும். அவரைப் பார்க்கிலும் சிறிது அதிக விவேகமுடையவர்களுக்கு, சீவனே தானென்றும் காணப்படுகிற பிரபஞ்சமனைத்தும் காலக்கிரமத்தில் வேறு ரூபமாக மாறுதலினாலே நித்தியமென்றும் தோற்றுதல் இயல்பு. அப்படிப்பட்டவர்கள் சத்துவகுண விசிட்டர்களாய்ப் பக்திமார்க்கப் பிரவிட்டர்களாய்ப் பிரவர்த்திக்கவேண்டும். அதன்பின்னர்த் தீவிர மோட்ச இச்சைபிறக்கும். அப்படிப்பட்ட மூமுட்சுக்கள் ஆன்மதத்துவத்தை விசாரிக்கவேண்டும்.

புராகிர்த சுகிர்த விசேடத்திற் கனுகுணமாகச் சிலர்க்கு ஞானமார்க்கம் சுலபமாயிருக்கும். சிலர்க்குப் பக்தி மார்க்கம் சுலபமாயிருக்கும். கர்மங்களை ஆசரிக்காவிடின் பக்தியுண்டாகாது. பக்தியுண்டாகாமல் ஞானம் சித்திக்காது. சகுணம் உப்புப்போன்றது. நிர்க்குணம் சலம்போன்றது. சலம் உப்பாகிறதென்னும் விடயம் யாவருக்கும் தெரிந்ததேயன்றோ? ஆதலின் ஞானமில்லாவிடின் முத்தியுண்டாகாது.

கர்மம் பிஞ்சு போன்றது, பக்தி காய்போன்றது, ஞானம் கனி போன்றது. சட்கவேதாந்தங்களை உபந்யசித்துக்கொண்டு தானே பிரம்மமென்று அகங்கரித்து, ஞானயோகத்தையடைந்து சுகிக்காமல், சத்பக்தியையும் ஞானயோகத்தையும் நிராகரிப்பவர்கள், சனன மரணமென்னும் அலைகளையுடைய சம்சார நதிப்பிரவாகத்தில் மூழ்கிக்கொண்டும் மிதந்துகொண்டும் அநேக துரவத்தைகளை யநுபவிப்பார்களென்றும், அநந்த கற்பாந்தரங்கள் கடந்தபோதிலும் அவர்களுக்குக் கடவுளநுக்கிரகம்சிறிதும் உண்டாகமாட்டாதென்றும் சாத்திராநுசாரமாகப் பெரியோர் கூறுகின்றனர்.

(தொடரும்.)

பத்திராதிபர்.

சமாசாரம்.

மோட்டார் கொள்ளைக்காரர்களுக்குத் தூக்குத் தண்டனை.

பாரிஸ் நகரத்தில் மோட்டார் வண்டிகளில் வந்து துணிகரமாய்க் கொள்ளைகள் நடத்திய கொள்ளைக்காரர்களில் காலிமன், டெளடி, மானிர் என்றமூவர் சென்ற 21-ம்வ தலை வாங்கப்பட்டார்கள். அம்மூவரும்கொலையைப் பார்க்கவந்த சனங்களுக்கு வந்தனங்கள் சொல்லிச் சந்தோஷமாய்ச் சத்தமிட்டுக்கொண்டே மாண்டார்களாம். டிடான்னி என்ற ஒருவன் மாத்திரம் கடைசி நிமிஷத்தில்விடுவிக்கப்பட்டான். தான் விடுவிக்கப்பட்டதான சொல் காதில் விழவே அவன் மனோசலனமடைந்து மூர்ச்சையாய்விட்டானும்.

நாகரிகமான ஓர் விவாகம்.

தஞ்சாவூர் ஜில்லா அம்மாப்பேட்டையில் துரோபதையம்மன் கோவில்தெருவில் கன்னடியசெட்டி ஜாதியாரில் ஒருவருக்குவிவாகம் நடந்தது. மணமகனுக்கு வயது 30. மணமகளுக்கு வயது 15. கலியாணத்திற்கு அவர்கள் ஜாதியில் வயதில் முதிர்ந்த ஒருவரையே முகூர்த்த காரியங்களை நடத்த புரோகிதஸ்தானத்தில் எற்படுத்துவது வழக்கமாம். அதுபோலும் ஊரில் உள்ள ஜனங்களுடனும் பந்துக்களுடனும் விவாகம் விமரிசையாய் நடந்தேறிற்று. வேஷ்டி புடைவையுடன் கலியாணம் சகல செலவும் ரூபா 10 - க்குள் முடிந்துவிட்டதாம். வீண்டம்பமாவது அநாவசியமான செலவாவது ஒன்றுமே யில்லையாம். மேளம்இல்லை. ஆசிர்வாதம் மங்கலப்பாட்டு வாழ்த்துப்பாட்டுகள் செவ்வனே கூறப்பட்டனவாம். வீம்புக்குவேட்டையாடுவதுபோல வீண்டம்பத்துக் காசைப்பட்டுக் கடன்வாங்கிக் கலியாணம் செய்து கஷ்டப்படுபவர்கள் இதைக் கவனிப்பார்களாக.

கடலில் ஓடும் ஆகாய விமானம்.

ஒரு ஆஸ்டிரேலியா இஞ்சினியர் ஆகாயவிமானம் புதுமாதிரியாய்ச் செய்வதைக் கண்டு பிடித்திருக்கிறார். அது ஜலத்திலும் ஆகாயத்திலும் தாராளமாய்ச் செல்லக்கூடியதாம். இப்போது பிரிட்டிஷ் கடற்படையில் இவ்விதமான ஆகாய விமானங்கள் இருக்கின்றன. ஆனால் அவைகள் ஆகா

122

யத்தில் பறந்தபிறகு ஜலத்தின்மேல் இறங்கித் தங்கியிருக்கலாமேயொழிய ஜலத்தில் ஓடமுடியா. இப்போது கண்டுபிடிக்கப்பட்ட இயந்திரம் ஒருகப்பலைப்போல்போகும். அது ஆகாயத்திலும் பறக்கக் கூடியதாயிருக்கிறது.

தபால் பெட்டிகளில் விசேஷம்.

கானடா தேசத்தில் புதிதாய் ஏற்படப்போகும் தபாற் பெட்டிகள் (ஸ்தம்பங்கள்)பார்வைக்கு அழகாயிருப்பதுமாத்திரமல்லாமல்உபயோகமான பல வேலைகளையும் செய்யும். ஒவ்வொரு ஸ்தம்பமும் அது இருக்கும் தெருவின் பெயரைத் தெரிவிக்கும். தபால் தலைகளை விலைக்கு விற்கும். வாங்குகிறவர்கள் பணத்தை அந்தப் பெட்டியில்போட்டு உடனே அதிலிருந்து அதற்குரிய தபாற்றலைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இரவும் பகலும் அது தன் வேலையைச் செய்துவரும். வியாபாரிகளுக்கு மிகவும் உபயோகமான மற்றொரு வேலையையும் செய்யும். அதெப்படியென்றால், விளம்பரங்கள் எழுதப்பட்ட பல தகடுகள் பெட்டியின் உச்சியில் அமைக்கப்பட்டிருக்கும். அவைகள் ஆறு வினாடிக்கொருதரம் ஒவ்வொன்றாய்ச் சுற்றிவரும். இராக் காலங்களில் அவ்விளம்பரங்களும் தெருவின் பெயரும் நன்றாய்த்தெரியும். சூரியாஸ்தமனத்திலிருந்து சூரியோதயம்வரையில் அப்பெட்டிக்குள்ளிருக்கும் விளக்கானது வெளிச்சத்தையும் கொடுத்துவரும். நள்ளிரவில் திரிகிறவர்களுக்கு வழிகாட்டியாயுமிருக்கும். இப்படிப்பட்ட தபாற்பெட்டிகளை வைக்க ஏற்பாடுசெய்தது கானடாதேசத்திய தபாலதிகாரிகளல்ல. அங்குள்ள ஒரு கம்பெனியார் தபாலதிகாரிகளிடமிருந்து இத்தகைய பெட்டிகளை வைக்க உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அப்பெட்டிகளின் மூலமாய்ச்செய்யப்படும் விளம்பரங்களின் பொருட்டுப் பலரிடத்திலும் வாங்கப்படும் தொகையைக்கொண்டும் ஸ்டாம்பு விற்பனையிலிருந்துவரும் கமிஷனைக்கொண்டும் இந்தநூதன ஏற்பாட்டின் செலவுகளெல்லாம் செய்யப்படும். பாக்கியிச்சமாயிருப்பதைக் கம்பெனிலாபமாகக் கொள்ளும்.

ஆகாய சஞ்சாரம்.

பிரான்ஸ் தேசத்தின் தலைநகராகிய பாரிஸிலிருந்து ஜெர்மனியின் தலைநகராகிய பெர்லினுக்கு டான்சோர் என்றபிரஞ்சுக்காரர் சென்ற16-ம்௳யன்று ஆகாய விமானத்தில் பறந்துபோய்ச் சேர்ந்தார். அதே தினத்தில் இங்கிலாந்திலுள்ள டோவர் துறைமுகத்திலிருந்து ப்ரான்ஸிலுள்ள கோலோனுக்கு ஹாமெல் என்பவர் 245 நிமிஷத்தில் பறந்தார்.

புதுவை கிருஷ்ணகான சபை.

(ஆநந்தாசிரம சாதுமகா சங்கத்தின் கிளைச்சங்கம்.)

மேற்படி சபையில் பிரமாதீச ௵ சித்திரை ௴ - ௧௪ - ௳ முதல் ௧௭ - ௳ வரையில் வருடோற்சவம் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி நான்கு தினங்களிலும் ஷை சங்கத்தின் சத்குருமூர்த்திகளாகிய ஸ்ரீமத் கரபாத்ர சிவப்பிரகாசசுவாமிகள் எழுந்தருளியிருக்க, வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பையசுவாமிகள் முதலிய சாதுக்கள் பலர் பிரசங்கமாரி பொழிந்தார்கள். அன்பர்கள் பலருங் கேட்டு ஆநந்தமடைந்தார்கள். விசேட பொருட்செலவினால் நடைபெற்ற இவ்வருடோற்சவத்தினால் பலர்க்கும் பெரியதோர் நன்மை கிடைத்திருக்கவேண்டும். இது என்றும் நின்று நிலவுமாறு ஈசன் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

புத்தக வரவு.

இராமாயண நீதிகவித் திரட்டு:—இது மகாகவியாகிய கம்பரும் ஒட்டக்கூத்தரும் இராமாயணத்தில் வர்ணனை மூலமாகவும் கதைப்போக்கின் மூலமாகவும் கருணைகாரணமாக ஆங்காங்கும் வெளிப்படுத்தியுள்ள நீதிகளடங்கிய கவிகளால் திரட்டப்பட்ட ஒருநூல். பொதுவாக யாவர்க்கும் பயன் படுவதுமன்றி விசேடமாகப் பிரசங்கம் செய்பவர்களுக்கும் வியாசமெழுதுபவர்களுக்கும் மிக்க பிரயோஜனத்தை விளைக்கவல்லது. இதைத் தொகுத்தவர் ஆரணிஜாகீர் காமக்கூர் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந், மு. சுந்தரமுதலியார். இதன் விலை அணா இரண்டே. வேண்டுவோர் ஷை முதலியாரவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். இதை நமது பார்வைக்கனுப்பிய அந்நூலாசிரியர்க்கு நன்றி செலுத்துகின்றோம்.

பத்திரிகை வரவு.

கிருஷிகள்:—இது சென்னையில் மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப் பத்திரிகை. பயிர்த்தொழில் செய்வோர்க்குப் பெரும்பயன் விளைக்குமாதலின், இது விவசாயிகள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கத் தகுந்தது. இதன் வருஷ சந்தா தபாற்கூலியுட்பட அணா பன்னிரண்டே. இதை நமக்கனுப்பிய இதனாசிரியராகிய ஸ்ரீமாந், J. R. ரங்கராஜு அவர்களுக்கு நமது நன்றியை அனுப்புகின்றோம்.

ப - ர்.

புதுவைக் கலைமகள் கழகம்.

இரண்டாவது வருடோற்சவம்.

நிகழும் பிரமாதீச ௵ வைகாசி ௴-௬-௳ முதல் ௧௨-௳ வரையில் நமது கலைமகள்கழகத்தின் இரண்டாம் வருடோற்சவம் நடைபெறும். அன்பர்கள்யாவரும் வந்து சிறப்பிக்கவேண்டுகின்றனம். பின்னர் வெளியாகும் வருடோற்சவபத்திரிகை மற்றைய விவரங்களைத் தெரிவிக்கும்.

இங்ஙனம்

தி - திருப்புளிசாமி ஐயர்

காரியதரிசி

கலைமகள் கழகம்

புதுவை.

விளம்பரம்.

இராஜ சுக மாத்திரை.

இம் மாத்திரை பழைய சக்ரவர்த்திகளால் ஆதரிக்கப்பெற்றபெரிய ஹக்கீம்களுடைய அரிய முறையின்படி செய்யப்பட்டது. உலகத்தில் ஆண் தன்மை யிழந்து என்செய்வோமென்று வருந்துபவர்களுக்கு இது ஒரு பெரிய சஞ்சீவி. கனவான்களே! நீங்கள் நோயற்றுச் சுகத்தை யனுபவிக்க விரும்பினால் இராஜ சுக மாத்திரையை எடுத்துக்கொள்ளுங்கள். அதுநல்ல பசிதீபன முண்டாக்கும். அஜீரணத்தைப் போக்கும். மலஜலப்பிரவர்த்தியைச் சுத்தப்படுத்தும். உடம்பு வலி, மார்பு வலி இன்னும் வாய்வு சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டிக்கும். குறிப்பாகச் சொல்லுகிறோம். நீங்கள் நீடித்த போகத்தை விரும்பினால் இராஜ சுக மாத்திரைக்கு இன்றைக்கே எழுதுங்கள்.

12 மாத்திரை அடங்கிய டப்பி 1 - க்கு ரூ. 1 - 8 - 0

தாதுபுஷ்டி தைலம்.

இது ஆண் தன்மையை முழுதும் இழந்துபோனவர்களுக்கு அந்தச் சக்தியை மறுபடியும் உண்டாக்குகிறது. இத்தைலம் வயது சென்றவர்களையும் வாலிபாக்குமென்பது உபசாரமன்று. குணமில்லாவிடில் கொடுத்த பணம் திரும்ப வாபீஸ் செய்யப்படும்.

தோலா 1 - க்கு கிரயம் ரூ. 40 - 0 - 0

ஒரு ஆளுக்கு அரைக்கால் தோலா போதுமானது.

தங்க சூர்ணம்

இவ்வருமையான சூர்ணம் 12 வருஷத்து வெட்டையையும் பறக்கச் செய்துவிடும். தாதைக் கெட்டிப்படுத்தும். இடுப்பு வலி, முழங்கால் வலி, முதுகுவலி இன்னும் வெட்டையைப்பற்றிய வியாதிகளனைத்தையும் கண்டிக்கும்.

சீசா 1 - க்கு கிரயம் ரூ. 1 - 8 - 0

ஆண்டவன் கிருபையால் எல்லா வியாதிகளுக்கும் நம்மிடத்தில் மருந்து கிடைக்கும். கடித மூலமாய் வியாதிகளை விபரமாக எழுதியனுப்பினால் தகுந்த மருந்துகள் அனுப்பப்படும். மருந்தை உபயோகிக்கவேண்டிய முறைமுதலியன மருந்துடன்வரும் நோட்டீஸினால்தெரிந்து கொள்ளலாம்.

N. B.—எந்தப் பாஷையில் எழுதினாலும் பதில் தெரிவிப்போம்,

A - R - Hakeem, Goghari Mohalla,

POST № 9. BOMBAY.

பல கண்காக்ஷிகளில்
மெடல்கள்பெற்ற அபூர்வ ஒளஷதங்கள்.

பி - சுப்பராய், ஆயுர்வேத

ஒளஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் கோயில் சந்நிதி, தஞ்சாவூர்.
தயவு செய்து
இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி-சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஒளஷதங்கள்.

1. தாதுபுஷ்டி மருந்து:—இதன் குணத்தை எழுதிமுடியாது. அனுபோகத்தால் தெரிந்துகொள்ளலாம். தாது நஷ்டம், பலஹீனம், ஆண்குறி துவளல், பசியின்மை, கண் கால் எரிவு, தேகவறட்சி, சீக்கிரத்தில்ஸ்கலிதம் சொப்பன ஸ்கலிதம், கை, கால் இடுப்பு முதலிய அவயவங்களில் சோர்வு, வலி, சோம்பல், மேகச்சூடு, பாண்டு, சோகை, மேக வெள்ளை, வெட்டை, நீரிழிவு, மதுமேகம், சதையடைப்பு, இன்னும் பற்பல மூத்திர ரோகங்களையும் போக்கும். சரீர புஷ்டி, புருஷத்தன்மை, போக சக்தி, ஜீரண சக்தி, அபரிமிதமான தாதுவிருத்தியையும் உண்டாக்கும். நீத்திருக்கும் இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை அதிகரிக்கும். டப்பா 1-க்கு விலை ரூபா 2, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

2. அக்கினி மாந்தத்திற்கு மருந்து:—பசியின்மை, புளித்த ஏப்பம், நெஞ்செரிச்சல், மலச்சிக்கல், வயிற்றுவலி, வாய் நாற்றம், அஜீரணம், வயிற்றுப்பிசம், நித்திரையில்லாமை, பித்த உபத்திரவங்களை சொஸ்தப்படுத்தும். பசி தீபனமும், தேக ஆரோக்கியமும் தரும். டப்பா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

3. பிரமேக நிவாரணி:—எந்த காரணத்தினால் உண்டாயிருக்கும்மேக வெள்ளை, வெட்டை, நீர் குற்றல், நீர் தாரை எரிவு, சீழ் இரத்தம்வடிதல், முதலிய வியாதிகளையும் ஆண், பெண் இருதரத்தார்களுக்கும் சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

4. லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:—தாம்பூலம் தரிப்பவர்கள் கையிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலை யுயர்ந்த வஸ்து. தந்தநோய், வாய் நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது சாப்பிட்ட பின் 2 மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும்உடனேஜீரணம் செய்வதுடன், வாயில் அநேகமணி நேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதி தினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினி

மாந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினாலுண்டாகும் வயற்றிழிவு, வயிற்று நோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்து வந்தால் ஜன்னி கிட்டநாடாது; ஜன்னியில்கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரி முதலான யாதொரு அபாயகரமான வஸ்துசேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சை கற்பூரம் முதலிய அநேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சை கற்பூரம் முதலியவாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அரைக் குழந்தைகள் முதல் வயது சென்றவர்களுக்குச் சளி, இருமல், காசம், காலரா, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1 முதல் 4 மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்கச் சுகமாகும். சீசா 1-க்கு விலை அணா4. இந்தியாவில் 1 முதல் 12சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு, தபால்சார்சு அணா 5-ம், சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகம்.

5. சர்வநோய் சம்ஹாரன்:—இத்தைலம் கொஞ்சம் தேய்த்தால் கை, கால், கணுக்களின் பிடிப்பு, வீக்கம், முடக்கம் மார்புநோய், தலைநோய், கழுத்துநோய், பக்கசூலை, இடுப்புநோய், குதகவலி, பார்சவாயு, மேகவாயு முதலான இன்னும் தேகத்தில் உண்டாகும் எல்லாநோய்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். சீசா 1 - க்கு விலை ரூபா 1, வி. பி. சிலவு 1 முதல் 3 சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

6 சுகந்த கூந்தல் தைலம்:—இத்தைலத்தால் தலைமயிர், மீசை கண் இமை வெகு செழிப்பாகவும், நெருக்கமாகவும், கறுப்பாகவும், வளரும். கண்களைக் குளிரச்செய்யும். சகல கண்நோய்களும், தலைநோய்களும் நீங்கும். செம்பட்டை மயிர் கறுக்கும். மயிர் உதிராமல் காக்கும். கண்களுக்கு பிரகாசத்தைத்தரும். விலை புட்டி 1-க்கு அணா 8, வி பி. சிலவு 1 அல்லது இரண்டு சீசாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

குறிப்பு:—இந்த இடங்களில் மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகள் தெரியாததால் ஆர்டர் செய்கிறவர்கள் தயவு செய்து தமிழிலாவது இங்கிலீஷிலாவது அடியிற் குறித்த விலாசத்துக்கு விவரமாக எழுதிப் பெற்றுக்கொள்ளக் கோருகிறேன்.

(இன்னும் வரும்.)

☞ எனது விலாசம்
பி - சுப்பராய்
ஆயுர்வேத ஔஷதசாலை
ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள்
கோயில்சந்நிதி, தஞ்சாவூர்.

☞ MY ADDRESS
P-SUBBAROY
Ayurvedic Pharmacy
Sri Venkatesa Perumal Koil
Sannathy, *TANJORE.*